# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No.40/2013

**Date:**28.09.2021 **DW.1(**ஏகப்பன்)

**வாதி தரப்பு கு.வி தொடர்ச்சி:**

ஏ செட்டியூல் பூர்வீக வீட்டில் என் தகப்பனாருக்கு பங்கு உண்டு. அப்பாத்தாவின் வாரிசுகள் அனைவருக்கும் பங்கு உண்டு. அந்த வீடு பூர்வீகச் சொத்து என்பதால் எனக்கும் அதில் பங்கு உண்டு. அந்த சொத்தை நான் சமூகம் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வந்துள்ள அசல் வழக்கு எண்:12/2015 வழக்கில் சேர்க்கவில்லை. பி செட்டியூல் 1-வது இலக்கச் சொத்தில் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதிக்கு வாரிசுப்படி பங்கு உண்டு. அந்தச் சொத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்:12/2015-வழக்கில் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதியை கட்சிக்காரராக சேர்க்கவில்லை. அந்த ஏ செட்டியூல் சொத்தினை வழக்கில் சேர்க்காததாலும், பி செட்டியூல் சொத்து சம்மந்தமாக என் தகப்பனாரை நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்:12/2015-வழக்கில் கட்சிக்காரராக சேர்க்காததாலும் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்:12/2015 நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், அது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும் சொன்னால் சரியல்ல. மலேசியாவில் என் தகப்பனார் 1-ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ள நபர் மூலம் பிறந்துள்ள குழந்தைகளுக்கு மேலேகண்ட சொத்துக்களில் பாக உரிமை உண்டா என்பது எனக்குத் தெரியாது. அந்த நபர்களையும் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்:12/2015-வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அவர்கள் இதுவரை நாட்டரசன்கோட்டை கிராமத்திற்கு வந்ததும் இல்லை, தாவா சொத்துக்களை அனுபவித்ததும் இல்லை. ஆகவே அவர்கள் தேவையில்லாத கட்சிக்காரர்கள் என்பதால் நான் தாக்கல் செய்துள்ள

அசல் வழக்கு எண்:12/2015-ல் கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லையா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் என் தந்தையான 1-ம் பிரதிவாதியை பார்ப்பதற்காக என் தாயார் கண்ணாத்தாள் ஆச்சியுடன் ஒரு முறையும், நான் மட்டும் 2 முறை மலேசியா சென்று வந்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. ஆனால் மலேசியாவிற்கு நான் போய் வந்துள்ளேன். எத்தனை முறை சென்று வந்துள்ளேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு நான் சென்ற போது மலேசியாவில் என் தகப்பனாரை நான் சந்திக்கவில்லை. நான் மலேசியா சென்ற போது என் தகப்பனார் வீட்டில் தங்கவில்லை. ஹோட்டலில் தங்கியிருந்தேன். மேற்படி ஹோட்டல் பெயர் ஞாபகமில்லை. பி செட்டியூல் 1-வது இலக்கச் சொத்து என் அம்மாவின் பெயரில் மனையிடமாக 12.07.1976-ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1993-ம் ஆண்டில் அந்த இடத்தில் வீடு கட்டி கிரகபிரவேசம் செய்ததும் எனக்குத் தெரியாது. அதற்கு என் அப்பா வந்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் அப்பாவிற்கு 60-ம் கல்யாணம் 02.05.1920-ம் தேதியன்று பி செட்டியூல் 1-வது இலக்க வீட்டில் நடந்தா என்றால் அது தெரியவில்லை. அதில் நான் கலந்து கொண்டேனா என்றால் அதுவும் தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவில் உள்ளது என் தகப்பனாரும், தாயாரும் 60-ம் கல்யாணத்தின் போது சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோவா என்றால் தெரியாது. மற்ற போட்டோக்களை பார்க்காமலே தெரியாது என்றும் சாட்சி சொல்லுகிறார். பி.வா.சா.ஆ.43 என்ற புகார் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதியும், வாதியும் சேர்ந்து தாவா ஏ செட்டியூல், தாவா பி செட்டியூல் 1, 2 இலக்கச் சொத்துக்களை வாதி பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிந்துவிட்டார்கள் என்பதற்காகத்தான் அந்த புகார் கொடுத்தேன். மதுரையில்

உள்ள சொத்து அந்த புகாரில் இல்லை. மற்ற ஏ செட்டியூல் 1-வது இலக்கச் சொத்து மற்றும் பி செட்டியூல் 1-வது இலக்கச் சொத்து பொறுத்து வாதிக்கு, 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது. அந்த செட்டில் மெண்ட் பத்திரம்(2) முறையே வா.சா.ஆ.120 மற்றும் 121 ஆகும். அந்த வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என் டைரக்சன் கேட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் சிஆர்எல்ஓபி தாக்கல் செய்தேன். அதில் 3 மாதத்திற்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று சிவகங்கை தாலுகா போலீசுக்கு டைரக்சன் கொடுக்கப்பட்டது. தற்போது 8 வருடங்கள் ஆகியும் அதில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. அது சம்மந்தமாக நான் சென்ற வாரம் கன்டம்ட் மனு தாக்கல் செய்திருக்கிறேன். அது பொய்யான புகார் என்பதால் தான் சிவகங்கை தாலுகா போலீஸார் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், நான் கன்டம்ட் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் இந்தியாவிற்கு வந்தால் உண்மையான சாட்சியத்தினை சொல்லிவிடுவார் என்றும், அது என் வழக்கிற்கு பாதகமான அமைந்துவிடும் என்ற காரணத்திற்காகத் தான் அவ்வாறு நான் அந்த பி.வா.சா.ஆ.43 வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.42 குற்ற எண்:320/2011 புகாரை எம்.எப் செய்துவிட்டார்கள் என்றும், அதற்கு மேல் நான் நீதிமன்றத்தில் நேர் புகார் தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த புகாரே எனக்கு ஞாபகமில்லை. அந்த புகார் என்னாயிற்று என்பதும் எனக்கு ஞாபகமில்லை. நான் நீதிமன்றத்தில் கொடுத்த நேர்முக புகாரை சென்னை உயர்நீதிமன்றக் கிளை Quash செய்து விட்டது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. குற்ற எண்:3/2014

வழக்கில் சாமான்களை கைப்பற்றிக் கொடுத்த பிறகு அந்த புகாரை என் மனைவி வாபஸ் பெற்றுக்கொண்டார். பி.வா.சா.ஆ.42 முதல் 44 ஆகிய போலீஸ் புகார்கள் வாதி தாவா வழக்கை தாக்கல் செய்த பிறகு அவர் மீது நான் கொடுத்த வழக்குகள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.42 முதல் 44 ஆகிய போலீஸ் புகார்கள் வாதியை மிரட்டி இந்த தாவா வழக்கினை வாதி மேல்நடத்தாது வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக போடப்பட்ட பொய் வழக்குகள் என்றால் சரியல்ல. நாட்டரசன்கோட்டை பி செட்டியூல், 1-வது இலக்கச் சொத்தினை பொறுத்து வாதி பெயருக்கு அவர் தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் வாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, அவர் பெயரில் மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் எனக்கு ஞாபகமில்லை. அதேபோல மதுரை பி செட்டியூல், 2-வது இலக்கச் சொத்தினை பொறுத்து வாதி பெயருக்கு அவர் தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் வாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, அவர் பெயரில் மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் எனக்கு ஞாபகமில்லை. மதுரை பி செட்டியூல், 2-வது இலக்கச் சொத்து 5 பகுதிகளாக உள்ளது. ஒரு பகுதியில் என் அம்மா குடியிருந்து வந்தும், மற்ற 4 பகுதிகளை வாடகைக்கு விட்டு வாடகை வசூல் செய்யப்படுகிறது. அந்த வாடகைகளை நான் தான் வசூல் செய்து என் அப்பாவிற்கு கணக்கு கொடுப்பேன் என்று சொன்னால் இல்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)**